D.V.No. 41/2024
நாள்: 17.04.2025
நேரம்: 11.20

P.W– 1: வனிதா, க/பெ. கண்ணன்

1, 2, 4, 5 எதிர்மனுதாரர்கள் ஆஜர் இல்லை. அவர்கள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

சாட்சி மனுவின்பேரில் திரும்ப அழைக்கப்பட்டு சத்திய பிரமாண வாக்குமூலம் செய்து மனுதாரர் தரப்பில் கூடுதல் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்ய அனுமதிக்கப்படுகிறார்.

முதல் விசாரணை :

1) மசா.ஆ.10 – 1ம் மனுதாரர் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த Crl.M.P. No.2627/2024ன் படி அவர் வசித்து வந்த வீட்டை நீதிமன்ற உத்தரவின்பேரில் காலிசெய்ய 1ம் எதிர்மனுதாரரை அழைத்தபோது 1ம் எதிர்மனுதாரர் வரமறுத்து உன்னால் முடிந்ததை பார்த்துக்கொள் என்று பேசிய ஆடியோ பதிவு மற்றும் மேற்படி வீட்டினை 1ம் மனுதாரர் காலி செய்தபோது மேற்படி வீட்டில் எந்த சேதாரமும் இல்லை என்பதை காட்டுவதற்கான வீடியோ பதிவு அடங்கிய Pendrive மனுதாரர்கள் தரப்பு சான்றாவணமாக குறியீடு செய்யப்படுகிறது.

2) மசா.ஆ.11 – 1ம் எதிர்மனுதாரர் அவரது பெயரில் உள்ள ஆவண எண்.333/2015 என்ற சொத்தினை பிச்சையம்மா லியோன் என்பவருக்கு இவ்வழக்கு நிலுவையில் இருக்கும்போது ஆவண எண்.2254/2024ன் படி பல லட்ச ரூபாய்க்கு விற்பனை செய்ததை காட்டுவதற்கான வில்லங்க சான்றிதழ் கணினி நகல் (7 பக்கம்) ஆகியன எனது தரப்பில் கூடுதல் ஆவணமாக தாக்கல் செய்யப்படுகிறது.

**(எதிர்மனுதாரர்கள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை மறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).**

E VIRGIN VESTA

Digitally signed by E VIRGIN VESTA
Date: 2025.04.17 16:05:47 +0530